# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அம்பாசமுத்திரம்

முன்னிலை : திரு.பெ.குமார், பி.ஏ.,பி.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அம்பாசமுத்திரம்.

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் நாள் திங்கள்கிழமை

**இ.ம.எண்.6/2023**
**உள்**
**அசல் வழக்கு எண்.102/2021**

எட்வர்டுராஜ் .... மனுதாரர்/1 ம்பிரதிவாதி

.... எதிர்....

1. கருப்பையா
2. மூக்கம்மாள் (இறப்பு)
3. தங்கத்துரை
4. அன்னபாக்கியம் ... 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/வாதிகள்
5.பேச்சியம்மாள் .... 5 ஆம்எதிர்மனுதாரர்/2 ஆம் பிரதிவாதி

இம்மனுவானது கடந்த 18.01.2024 அன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்/1 ம்பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M. இராஜேந்திரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.பி.வி.டி. பெருமாள் பாண்டியன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்டும் மனு அபிடவிட், மற்றும் எதிருரை ஆகியவைகளை ஆராய்ந்து, இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்ததுமான இம்மனுவில் இன்று 22.01.2024 ம் தேதி இந்நீதிமன்றம் வழங்கும்.

## உத்தரவு

அசல் வழக்கில் ஏற்கனவே எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்துள்ள கடந்த 27.03.2008 ம் தேதியிட்டு எட்வர்டுராஜ்க்கு மாரியம்மாள் எழுதிக்கொடுத்த அனுபவ யாதஸ்தினை மனுதாரர் தரப்பில் சான்றாவணமாக குறியீடு செய்ய அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இம்மனுவானது உ.ந.மு.சட்டம் பிரிவு 151 ன்படி தாக்கல்.

**2. மனுவின் சுருக்கம்:-**

அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் எதிர்கோரிக்கையுடன் எதிர்உரை தாக்கல் செய்யப்பட்டு 2ம்தபசில் சொத்தைப் பொறுத்து சுவாதீன பரிகாரமும், 3ம்தபசில் சொத்தைப் பொறுத்து உறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரப்பட்டுள்ளது. எதிர்கோரிக்கையுடன் கடந்த 27.03.2008ம் தேதி மாரியம்மாள் என்பவர் மனுதாரருக்கு தாவா சொத்தைப் பொறுத்து ஏற்படுத்திக் கொடுத்த உள்குத்தகை ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்பதால் குறியீடு செய்யப்படவில்லை. மேற்படி ஆவணமானது குத்தகை ஆவணம் ஆகும். நஞ்சை நிலத்தைப் பொறுத்து ஏற்படும் குத்தகை ஆவணத்தினை பதிவு செய்ய வேண்டிய அவசியம் எதுவும் இல்லை. உண்மையில் மேற்படி ஆவணம் உள் குத்தகை ஆவணம் ஆகும். ஆனால் தலைப்பில் கிரைய ஆவணம் என எழுதப்பட்டுள்ளதால் மேற்படி ஆவணத்தினை குறியீடு செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, மேற்படி ஆவணத்தினை குறியீடு செய்ய அனுமதியளிக்கக் கோரி இம்மனு தாக்கல்

**3. எதிருரையின் சுருக்கம்:-**

மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் தவறானது. 27.03.2008ம் தேதியிட்ட பதிவு செய்யாத கிரைய ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தினை பார்த்தாலே மேற்படி ஆவணம் பொய்யான ஆவணம் என்பது தெரியவரும். மேற்படி ஆவணத்தினை அ.வ.எண்.82/08 வழக்கில் இம்மனுதாரரால் தாக்கல் செய்யப்படவில்லை என தீர்ப்புரையில் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. அதன் பின்னிட்டு இந்த ஆவணம் தாக்கல் செய்யப்படுவதால் மேற்படி ஆவணம் மோசடியாக உருவாக்கப்பட்டுள்ளது தெளிவாகிறது. எனவே, மேற்படி ஆவணத்தினை குறியீடு செய்ய இயலாது. மேலும், மேற்படி ஆவணம் முன் தீர்ப்பு தடையால் பாதிக்கப்பட்டுள்ளது என்பதால் அசல் மனுவைத் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**4.** இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில். கடந்த 27.03.2008ம் தேதியிட்டு எட்வர்டுராஜ்க்கு மாரியம்மாள் எழுதிக்கொடுத்த அனுபவ யாதஸ்தினை மனுதாரர் தரப்பில் சான்றாவணமாக குறியீடு செய்ய அனுமதியளித்து உத்தரவிட வேண்டுமா? இல்லையா? என்பதே ஆகும்.

**தீர்வு :–**

**5.** இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிடப்படவில்லை. மனு மற்றும் எதிருரையில் சொல்லியுள்ள சங்கதிகளையொட்டியே மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர்கள் வாதிட்டனர்.

6. மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை பரிசீலித்து அசல் வழக்கை பார்வையிடும்போது, அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள் வாதிகளால் தாவா சொத்தினைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் மனுதாரர் தரப்பில் சுவாதீன பரிகாரமும் உறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரி எதிர்கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி வழக்கில் வாதி தரப்பில் சாட்சி விசாரணை முடிக்கப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் பி.சா.1 விசாரிக்கப்பட்டு, முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்பட்ட போது கடந்த 31.10.2023 ல் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது.

7. அடுத்ததாக இம்மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை பார்வையிடும்போது, 27.03.2008 ம் தேதியிட்ட பதிவு செய்யாத ஆவணம் குத்தகை ஆவணம் என்றும் அது தவறுதலாக கிரைய ஆவணம் என தலைப்பிடப்பட்டுள்ளதாகவும், மேற்படி ஆவணத்தினை படித்துப் பார்த்தாலே அது குத்தகை ஆவணம் என்பது தெரியவரும் என்றும் நஞ்சை நிலத்தைப் பொறுத்து ஏற்படும் குத்தகை ஆவணத்தினை பதிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்பதால் மேற்படி ஆவணத்தினை குறியீடு செய்ய அனுமதியளிக்க வேண்டுமென சொல்லப்பட்டுள்ளது தெரியவருகிறது.

8. மேற்படி சங்கதியை பரிசீலித்து 27.03.2008 ம் தேதியிட்ட ஆவணத்தினை பார்வையிடும்போது, அதில் கீழ்க்கண்டவாறு

> "அம்பாசமுத்திரம் தாலுகா, ஆலடியூர் கிராமம், திருப்பதியாபுரம், படித்துரை தெருவில் குடியிருந்து வரும், லேட்.S.ஆபிரகாம்ஞானமுத்து அவர்கள் குமாரர் A.எட்வர்ட் ராஜ் அவர்களுக்கு,

ஷை தாலுகா, சிவந்திபுரம் கிராமம், மடத்துத்தெருவில் குடியிருந்து வரும், லேட்.செந்திவேல் பிள்ளை அவர்கள் மனைவி மாரியம்மாள் எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம்

செந்தில்வேல் பிள்ளை பயிர் செய்து அனுபவித்து வந்து ஷையார் காலஞ்சென்ற பின் நான் பயிர் செய்து அனுபவித்து வருகிற இதன் தபசில் கண்ட சொத்தை நான் தங்களுக்கு ரூ.70,000/– எழுபதாயிரத்துக்கு கிரையம் செய்து தந்து கிரையத்தொகை ரூபாய் எழுபதாயிரத்தையும் இதன் பணப்பற்று விபரத்தில் கண்டபடி நான் தங்களிடமிருந்து ரொக்கம் பெற்றுக்கொள்டு நாளது தேதி முதல் தபசில் சொத்தை தங்கள் சுவாதீன அனுபோகத்திற்கு விட்டுவிட்டபடியால் ஷை சொத்தை நாளது தேதி முதல் சர்வ சுதந்திர பாத்தியமாயும், கிரைய பாத்தியமாயும் ஆண்டனுபவித்துக்கொள்ள வேண்டியது"

என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி ஆவணத்தில் பணப்பற்று விபரமும் சொல்லப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் கண்டுள்ள சங்கதிகளை பரிசீலிக்கும்போது மேற்படி ஆவணம் மனுதாரர் கூறுவது போல் குத்தகை ஆவணம் இல்லை என்பதும் அது கிரைய ஆவணம் என்பதும் தெரிய வருகிறது. எனவே, கிரையமானது ரூ.100/– க்கு மேல் ஏற்பட்டால் அதனை பதிவு செய்ய வேண்டும். அதேபோல் மேற்படி ஆவணம் போதிய முத்திரைத்தாளிலும் எழுதப்பட்டிருக்க வேண்டும். ஆனால் மனுதாரர் தரப்பில் சொல்லப்படும் 27.03.2008 ம் தேதியிட்ட ஆவணமானது போதிய முத்திரைத்தாளில் எழுதப்படாமலும், பதிவு செய்யப்படாமலும் இருப்பதாலும், மேற்படி ஆவணத்திற்கு குறைவு முத்திரைத்தாள் செலுத்த மனுதாரர் தரப்பில் யாதொரு நடவடிக்கையும் எடுக்காததாலும் மேற்படி ஆவணத்தினை இந்த வழக்கில் மனுதாரர் தரப்பில் குறியீடு செய்ய அனுமதிக்க முடியாதென இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மனுவின் தன்மை கருதி அவரவர் செலவுத்தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

இறுதியாக இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2024–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P KUMAR
Digitally signed by P KUMAR
Date: 2024.01.22 18:59:57 +0545

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அம்பாசமுத்திரம்.

**மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்** - இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்** - இல்லை

P KUMAR
Digitally signed by P KUMAR
Date: 2024.01.22 19:00:03 +0545

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அம்பாசமுத்திரம்.

முு.மா.உ.நீ.அம்பை
இ.ம.எண்.6/2023
அ.வ.எண்.102/2021
நேரிய/வரைவு உத்தரவு
நாள்:22.01.2024